11th December 1959]

SRI R. KRISHNASAMI NAIDU : பரிசீலனை செய்து சாத்தியம் என்று கருதப்பட்ட திட்டங்களுக்கு கேரளாவிலிருந்து தணணீர் கிடைப்பதற்கு வேணடிய திட்டங்களை வகுப்பதற்கு மூன்றாவது ஐந்தாணடு திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிககை எடுத்திருக்கிறதா? இல்லையென்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பம்பையாறு, பெரியாறு திட்டங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசாங்கம் வேண்டிய அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. இருந்தாலும் இதையெல்லாம் ஸோனல் கௌன்ஸிலில் வைத்துததான் முடிவு செய்யவேண்டும்.

Vaigai Project

* 105 Q.—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Works be pleased to state the results of the examination of the question of letting water from the Vaigai Project to the East Ramanathapuram area?

THE HON. SRI P. KAKKAN : The question of letting down water from the Vaigai Project to the East Ramanathapuram area has been examined by the Government with reference to the suggestions made in the Conference held at Sivaganga on 16th November 1958 and it is found to be not feasible for the present for the following reasons :—

(1) A quantity of 8,415 m.c.ft. of water is required to cater to the needs of the entire ayacut under the Vaigai during August and September so as to enable the ryots in sowing, while the Vaigai flows that can be impounded in the Vaigai Reservoir for the above purpose are computed at 2,300 m.c.ft. which are quite insufficient.

(2) The transmission losses in the channels will be very heavy.

(3) Most of the channels do not have head sluices and it will be difficult to restrict the flows in the channels.

The Government, therefore, consider that the above proposal has to wait for some time till adequate datas are collected on the working of Vaigai flows that can be safely counted as impoundable in the reservoir, etc., and till the necessary improvements are carried out to the Vaigai-fed channels for the investigation of which, a sub-division has recently been sanctioned.

SRI K. RAMACHANDRAN : ஸார், இந்த வைகை அணைத் தேக்கத்திலிருந்து தண்ணீர் சப்ளை செய்யலாம் என்று ராமநாதபுரத்தில் எவ்வளவு ஆயக்கட்டு நிலங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டது? இந்த அணைத் தேக்கத்தில் நிறுத்தப்படும் தண்ணீரின் அளவு என்ன?

[11th December 1959

The Hon. Sri P. KAKKAN வைகை அணைத் தேக்கத்தில் புதிதாக வரக்கூடிய தண்ணீரும் சேர்த்து 2,300 கன அடி தண்ணீர் அதிகப்படியாக சேர்த்து வைக்கப்படும். மேலும் இதிலிருந்து ராமனாதபுரத்திலுள்ள . . .

Mr. SPEAKER: When hon. Members put supplementary questions, they should put it in such a way that the Minister can answer them straightaway. If they want to have such complicated figures, they must give sufficient notice to the Ministers. Otherwise, I do not think it will be fair to the Ministers and to this House also. I request the hon. Members to be reasonable. They may clearly specify the points one by one in their question and give notice of the same to the Ministers in advance.

* 106 *Q.*—Sri T. L. SASIVARNA THEVAR (on behalf of Sri D. SUBRAMANIA RAJAKUMAR): Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the names of the villages in Sivaganga taluk that will be benefited by the Vaigai Project Canal Scheme through the Shieldkal and the Lessieskal;

(*b*) whether the villages already benefited by these kals have been excluded now; and

(*c*) if so, the names of the villages and the reasons for excluding them?

The Hon. Sri P. KAKKAN: (*a*) A statement [a] showing the names of the villages in Sivaganga taluk that will actually get the benefit of the Vaigai Project Scheme with reference to the supply available for new areas through the Shieldkal and the Lessieskal is placed on the table of the House.

(*b*) & (*c*) Information is not available at present, and it requires detailed investigation to collect the information about the villages under Lessieskal and Shieldkal, which were having the benefit of drainage and seepage flows from the Periyar Project ayacut.

Sri K. RAMACHANDRAN: ஸார், இந்த பெரியாறு அணையிலிருந்து ஷீல்டுகால் கால்வாய் வழியாக முன்னால் 50 கிராமங்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. ஆனால் இப்போது 15 அல்லது 20 கிராமங்களுக்குத்தான் பாசன வசதி செய்து கொடுக்கப்படுவதாக தெரிகிறது. இதற்கு காரணம் என்ன? மேலும் முன்போலவே, கொடுத்துக்கொண்டிருந்த எல்லா கிராமங்களுக்கும் பாசன வசதி கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

The Hon. Sri P. KAKKAN: அரசாங்கம் இதில் நன்றாக பரிசீலனை செய்தபின்தான் சிக்கனமாக தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கருதி, பல கண்மாய்கள் வழியாக விவசாயத்தை பெருக்குவதற்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்விதம் கொடுத்து வருவதால் யாருக்கும் பாதகம் இருக்கும் என்று தோன்றவில்லை.

---

[a] Printed as Appendix II on page 548 infra.